28-11-2006 அன்று மாற்று இடம் மனை கிடைக்காத மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்தார்கள். மாற்று இடம் கேட்டார்கள். மாவட்ட ஆட்சியாளர் பொது மக்களை மீண்டும் தாசில்தார் அலுவலரிடம் அனுப்பி வைத்தார். இதற்கிடையே மகளிர், பொது மக்கள் சார்ந்த அமைப்பாளர்கள் மனு எழுதி தலைமைச் செயலகம், வில்லிவாக்கம் தொகுதி எம்.எல்.ஏ உயர்திரு. ப. ரங்கநாதன் அவர்களிடமும், குடிசைப்பகுதி மந்திரி மாண்புமிகு தா.மு. அன்பரசன் அவர்களிடமும், பொது பணித் துறை மந்திரி அவர்களிடமும், காவல்துறை துணை கமிஷனரிடமும், திருவள்ளுவர் மாவட்ட ஆட்சியாளரிடமும், பொன்னேரி ஆர்.டி.ஓ. அதிகாரியிடமும், அம்பத்தூர் தாசில்தாரிடமும், போரூர் எஸ்.ஆர்.சி காவல் நிலையத்திலும் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து மனு கொடுத்துள்ளனர். இந்த நகரில் வாழ்ந்த மொத்த மக்கள் தொகை 30,000, வீடுகள் 6,000, பள்ளிகள் 5 போன்ற எண்ணிக்கைகளை தெரிவித்தார்கள்.

29-11-2006 மற்றும் 30-11-2006 ஆகிய இரண்டு தேதிகளில் மனுக்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டன.

1-12-2006 அன்ற மாற்று இடம் கிடைக்காத மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பொது மக்கள் அனைவரும் கூடப்பாக்கம் சாலையில் உட்கார்ந்து ஆர்பாட்டம் செய்தார்கள். இன்றே தங்களுக்கு மாற்று இடம் கிடைக்க வேண்டிய தேதி அறிவிக்க வேண்டும் என்று ஆர்பாட்டம் செய்தார்கள்.

அப்பொழுது தகவல் அறிந்து அம்பத்தூர், திருவள்ளுவர் மாவட்ட ஆட்சியாளர், பொன்னேரி ஆர்.டி.ஓ. அதிகாரி அனைவரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொது மக்களிடம் வந்தார்கள். விசாரணையின் பேரில் நாளை முதல் மாற்று இடம் அளிக்கப்படும் என்றும், 24, 26 மற்றும் 28 தேதிகளில் அம்பத்தூர் அலுவலகத்திற்கு வரும்படியும் எழுதிக் கொடுத்தார்கள்.

2-12-2006 முதல் 5-12-2006 வரை மாற்று இடம் கொடுக்கப்படுவதற்கு விசாரணைக்காக அம்பத்தூர் வரவும் என்று எழுதிக் கொடுத்தார்கள்.

6-12-2006 அன்று கூடப்பாக்கத்தில் உள்ள மக்கள் எங்கள் நிலங்களைக் கொடுக்க மாட்டோம் என்று பூர்வீக ஊர்மக்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். இதனால் மாவட்ட ஆட்சியாளர், போரூர் மக்களை யாரும் உடனே கூரை அமைக்க வேண்டாம் என்று அறிவித்தார். கிராம அதிகாரிகளிடம் மாவட்ட ஆட்சியாளர் பேச்சு வார்த்தை நடத்தி, சுமுகமாக முடித்தபின் மாற்று இடத்தில் கூரை அமைக்க உத்தரவிட்டார்.

7-12-2006 மதல் 2412-2006 வரை மாவட்ட ஆட்சியாளரிடமும், தாசில்தார் அலுவலகத்திற்கும் பொது மக்கள் மாற்று இடம் வேண்டி அலைந்து கொண்டிருந்தார்கள். மேலும் 24ஆம் தேதி அன்று பொது மக்களை வரச் சொல்லி விட்டு, டோக்கன் கொடுக்கப்படவில்லை.

28-12-2006 அன்று 300 குடும்பங்களுக்கு மட்டும்தான் டோக்கன் கொடுத்தார்கள்.

29-12-2006 முதல் 30-12-2006 வரை நிறுத்தி வைக்கப்பட்டது. மீண்டும் 4-1-2007 அன்று தாசில்தார் அலுவலகம் வரச் சொன்னார்கள்.

எல்லா ஆவணங்களையும் கேட்டு டோக்கன் 400 பேர்களுக்கு மட்டும் கொடுத்தார்கள். மீதம் உள்ளவர்களுக்கு கிடைக்கவில்லை.

23-1-2007 வரசொல்லி பொது மக்களை தாசில்தார் அனுப்பி வைத்தார். மேலும் அங்கு வந்த மக்களிடம் அம்பத்தூர் வட்டம் என்ற முத்திரை பதித்த ரசீது கொடுத்தார்.

இந்த ரசீது பத்திரம் வைத்திருந்தவர்களுக்கு மட்டும்தான் மனை வழங்கப்பட்டது. மற்ற



ஆதாரங்கள் வைத்திருந்தவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள். ஆக இவர்களுக்கு இன்னும் மாற்று இடம் காண்பிக்கப்படவில்லை.

பொது மக்கள் மீண்டும் மாற்று இடம் வேண்டி தாசில்தார் அலுவலகம் சென்று அலைந்து கொண்டு தான் இருக்கின்றனர். இந்த அவல நிலை உலகத்தில் உள்ள எந்த மக்களுக்கும் வரகூடாது. 18 ஆண்டு கால மக்களின் வாழ்க்கை குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது.

## தற்போதைய நிலை

போரூர் எரிக்கரையில் வசித்த மக்களின் தற்போதைய நிலை பெரும் கேள்விக்குறியாக தொடர்கிறது. இவர்களின் வாழ்கை முறையும் பெரும் இன்னல் சூழ்ந்து அடிப்படை உரிமைகளான ஆன வீட்டு வசதியும், ஜீவாதாரமும் மறுக்கப்பட்டு வறுமையில் வாடுகின்றனர்

## குடும்பங்களின் நிலை

இடிபாடுகளில் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு இன்னும் வீடுகள் ஒதுக்கப்படவில்லை. எனவே அவர்கள் தொடர்ந்து பல இடங்களுக்கு அலைந்து கொண்டிருக்கின்றனர். அதிகாரிகளின் பொறுப்பற்றப் போக்கினால் பல குடும்பங்கள் தங்களது வீடுகளை இழந்து தவிக்கின்றனர். இவர்களின் வேலை வாய்ப்பு என்பதும் மிகவும் கேள்விக் குறியாகியுள்ளது. தாங்கள் செய்யும் கூலி வேலையையும் செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன. பல குடும்பங்கள்